# பல்கலைக்கழகம் / உயர் கல்வி நிலையங்கள்

சுவிசில் 3 விதமான உயர்கல்விச்சாலைகள் உள்ளன. பல்கலைக்கழகம், ஆசிரியர் உயர் பயிற்சிக்கல்லூரிகள் மற்றும் தொழில்துறைக்கல்லூரி. வெளிநாட்டு மற்றூறிற் பத்திரங்களுடன் இப்பாடசாலைகளுக்கு நேரடியாக விண்ணப்பிக்க முடியும்.

## உயர்கல்வி நடைமுறை

சுவிசின் உயர் கல்வி நிலையங்களில் பல்கலைக்கழகத்தையும் மத்திய தொழில்நுட்பக்கல்லூரி, ஆசிரியர் உயர் பயிற்சிக்கல்லூரி மற்றும் அறிவியல் உயர் கல்லூரியையும் வித்தியாசப்படுத்தமுடியும் (Tertiärstufe | Degré tertiaire). அறிவியல் உயர் தொழிற்துறைக்கல்லூரிகள் கூடுதலாக செயன்முறையையும் பல்கலைக்கழகங்கள் கூடுதலாக கோட்பாடுகளையும் கொண்டுள்ளன. பாடசாலை நடைமுறைகளும் ஒருதரமட்டமாக்கப்பட்டு ஐரோப்பிய பொலோனா-நடைமுறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இங்கு ஐரோப்பாவால் அங்கீகரிக்கப்பட்ட இளங்கலை அல்லது முதுகலைப் பட்டம் பெற்றிருக்கிறார்கள்,

## அனுமதித்தல்

ஒவ்வொரு உயர்கல்விக்கூடங்களும் வேறுவேறான அனுமதி நிபந்தனையை கொண்டிருக்கும். சுவிஸ் மற்றூறிற் பத்திரங்களுக்கு உயர்கல்வி அனுமதி நிச்சயமானது. வெளிநாட்டு மற்றூறிற் பத்திரங்கள் எப்போதும் அங்கீகரிக்கப்படுவதில்லை. கற்கவிரும்பும் பாடநெறிக்கு அவை உள்ள உயர்கல்விக்கூடத்திற்கு (பல்கலைக்கழகம் /தொழிற்துறைக்கல்லூரி) விண்ணப்பிக்கலாம். பொதுவாக மிகத்திறமையான டொச்-அல்லது பிரான்ஸ் மொழி தேவைப்படுகிறது. சில விதிவிலக்காக முற்றாக ஆங்கிலத்தில் நடைபெறும் துறைகளும் உள்ளன.பேர்ண் உயர் கல்வி ஆலோசனை நிலையம் வேறுவேறான நிலைகளில் உள்ள சந்தர்ப்பங்கள் பற்றி எப்போதும் தகவல் வழங்குகிறது.

## அதி உயர் தொழிற்கல்வி

சுவிசில் உயர்கல்விச்சாலைகளைத்தவிர அதிஉயர் தொழிற்கல்வியும் மேற்படிப்பு கற்பதற்கு விரும்பத்தக்க வழியாக இருக்கிறது. இது தொழிற்சிறப்புநபரை ஒரு விசேடநிலைக்கு மற்றும் ஆளமான சிறப்;பான அறிவு மற்றும் கொண்டு செலுத்தும் தகமையையும் உருவாக்குகிறது. உயர் தொழற்பயிற்சியானது முடிவில் தொழிலிற்கான அடிப்படைப்பயிற்சியைத் தருகிறது. (Berufslehre | Apprentissage). இதற்கு மற்றூறிற் முக்கியமில்லை. பேர்ண் தொழில்ஆலோசனை- மற்றும் தகவல் மையம் (BIZ | OP) வேறுவேறான நிலைகளில் உள்ள சந்தர்ப்பங்கள் பற்றி தகவல் வழங்குகிறது.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-bern.ch/ta/school-and-education/universities--universities-of-applied-sciences